A/L Day Class
இப்பொழுது
நடைபெறுகின்றன
8-15 — Physics
9-15 — Chemistry
10-30 — Zoology
10-30 — App Maths
11-30 — Botany
11-30 — Pure Maths
Bond INSTITUTION
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

A/L DAY CLASS
(வார நாட்களில்)
Physics -
Mr நந்தகுமார் B. Sc.
Chemistry -
Mr. Bar B. Sc.
Zoology -
Mr. ஈசன் B. Sc.
Botany -
Mr. கதிர்காமநாதன் B Sc.
Pure Maths.- App Maths
Mr. சந்திரமோகன் B.Sc.
Bond INSTITUTION

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு கார்த்திகை மீ 28 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 11 (14-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 15

# சீருடையினர் கல்முனையில் பயங்கரவாதம்

## 3 முஸ்லிம்கள் 1 தமிழர் பலி; கோவில், வீடுகள் வாகனங்கள் தீயில்

— அம்பாறை மாவட்டச் செய்தியாளர் —

அம்பாறை, டிசம்பர் 14

கல்முனை, தரவை அம்மன் கோயிலடி ஆகிய இடங்களில் சீருடையினர் நடத்திய பயங்கரவாதத்தால் 4 பேர் உயிரிழந்தனர். அவர்களில் மூவர் முஸ்லிம்கள். ஒருவர் தமிழர் இறந்த மூன்று முஸ்லிம்களில் பெண்மணி ஒருவரும் அடங்குவார்.

சீருடையினர் நடத்திய வெறியாட்டத்தில் 15 கடைகள், வீடுகள் எரிக்கப்பட்டன. கார்களும் எரிக்கப்பட்டன மூன்று ஆலைகளும் எரித்து நாசமாக்கப்பட்டன. தரவை அம்மன் கோயிலும் தீ வைத்துச் சேதமாக்கப்பட்டது.

தரவைக்கோயிலடியில் முன்னர் இடம் பெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து, அந்த இடத்துக்கு விரைந்து வந்த பொலீஸ் கொமாண்டோக்கள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இரண்டு முஸ்லிம் ஆண்களும் ஒரு முஸ்லிம் பெண்ணும் உயிரிழந்தனர். ஒரு தமிழ் ஆணும் இறந்தார், உயிரிழந்த முஸ்லிம் பெண்ணின் ஒன்றரைக் வயதுக் குழந்தை படுகாயமடைந்தது. இக்குழந்தை கண்டி ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது

அதன் பின்னர் பொலீஸ் கொமாண்டோக்கள் கல்முனைக்குடிக்குச்சென்றனர்.

அங்கு முஸ்லிம்களுக்குச் சொந்தமான 3கார்கள் எரிக்கப்பட்டன. ஒரு கார் தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரமு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# போராளிகள் தாக்கி மூன்று பொலீஸார் பலி

அம்பாறை, டிச. 14

போராளிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பொலீஸார் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்,

இத்தாக்குதல் நேற்றுக் காலை 6 மணியளவில் கல்முனை, தரவை அம்மன்கோயிலடியில் இடம்பெற்றது.

உயிரிழந்த பொலீஸாரில் ஒருவர் சப்-இன்ஸ்பெக்டர். இரண்டுபேர் கான்ஸ்டபிள்கள்.

கல்முனை — அக்கரைப்பற்று பிரதான வீதியில் கல்முனைக்குடியின் எல்லையில் தரவை அம்மன் கோயிலடி உள்ளது.

அவ்வழியால் ரோந்து வந்த பொலீஸ் ட்ரக்மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது அப்போதே மூன்று பொலீஸாரும் உயிரிழந்தார்கள். (அ-எ-14)

### ஊரடங்கு

அம்பாறை, டிச. 14

கல்முனைப் பொலீஸ் பகுதியில் நேற்று நண்பகலில் இருந்து உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

இன்று காலை 4 மணி வரை ஊரடங்குச்சட்டம் அமுலில்இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. (அ-எ-14)

### மன்சூர் விரைவு

கொழும்பு, டிச. 14

கல்முனை எம். பியும் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சருமான ஜனாப் ஏ. ஆர். மன்சூர் கொழும்பில் இருந்து நேற்றுப் பகல் விசேட விமானமூலம் மட்டக்களப்பு சென்றார்.

கல்முனையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்தே அவர் விரைந்தார். (அ-எ)


### "சுதந்திர விசாரணை நடத்துக"

மட்டக்களப்பு,டிச. 14

கல்முனைச் சம்பவங்கள் குறித்து சுதந்திர விசாரணை நடத்துக!

மட்டக்களப்புப் பிரசைகள் குழு ஜனாதிபதிக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)



சுலோக அட்டைகளுடன் நடக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் என்று நினைத்து விடாதீர்கள்.

கைதடி நவீல்ட் பாடசாலையில் செவிப்புலன் இழந்த பிள்ளைகள் நிகழ்ச்சி ஒன்றில் தமக்குரிய முறையில் சில வாசகங்களைப் படித்துக்காட்டுகிறார்கள்.

சபையில் உள்ளவர்களுக்கு விளங்க வேண்டும் என்பதற்காகவே அந்த வாசகங்களை அட்டையில் எழுதித் தொங்கவிட்டுள்ளார்கள்,

இவர்களின் நத்தார் கலை நிகழ்ச்சிகள் பற்றி விவரணச் சித்திரம் 3 ஆம் பக்கத்தில்.

### முச்சந்தி முனி



நல்லது தைப்பொங்கலோடு உன்நாட்டு ரொபி சாப்பிடலாமாம் இனிப்பான செய்தி. இனி கொழும்பு ரொபியைத் தடைசெய்ய வேணும் பாருங்கோ...!

### மன்னாரில் ஜீப் கடத்தல்

யாழ்ப்பாணம், டிச. 14

மன்னார் மலேரியா தடுப்பு இயக்கத்திற்குச் சொந்தமான ஜீப் ஒன்று இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமைஇரவு 8-30 மணியளவில் இச் சம்பவம் நடந்தது.

# இணை அமைச்சர் குழுவின் வருகை தடைப்பட்டது

கொழும்பு, டிச. 14

இந்திய இணை அமைச்சர் குழு கொழும்பு வருவது தடைப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

திட்டமிட்டபடி இந்திய அமைச்சர் குழு கடந்த 12, 13ஆம் திகதிகளில் சென்னை வந்திருக்கவேண்டும்.

குழு இன்னும் சென்னைக்குச் செல்லவில்லை. இதன் காரணமாக திட்டமிட்டபடி கொழும்புக்கு இம்மாதம் 16ஆம் திகதி இந்தியக் குழு வருமா? என்பது கேள்விக் குறியாக உள்ளது.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி காரணமாகத்தான் இணை அமைச்சர் குழு சென்னைக்கு செல்வது தடைப்பட்டுள்ளதாக ஒரு தகவல் கூறுகின்றது.

கடைசியாக திருகோணமலை பற்றி இலங்கை அரசு இந்தியத் தூதரிடக்ஸிற் மூலம் அனுப்பி வைத்துள்ள பிந்திய யோசனைகள் இந்திய அரசின் எதிர்பார்ப்புக்கு அமைவாக இருக்கவில்லை என்று இன்னொரு தகவல் கூறுகின்றது.

எப்படி இருப்பினும் இணை அமைச்சர் குழுவின் கொழும்பு விஜயம் எப்போது இனி இடம் பெறும் என்பது சொல்ல முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது —

இப்படி கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (அ-ஐ-எ)

### பொங்கல் தினம் "பாம்டா" டொபி

#### பனம் பாணியிலிருந்து மற்றோர் உற்பத்தி

யாழ்ப்பாணம், டிச 14

பனம் பாணியிலிருந்து டொபி தயாரிக்கப்படும்.

அதற்கான தொழிற்சாலை ஒன்று யாழ் மாவட்டத்தில் பனம்பொருள் அபிவிருத்திச் சபையினால் நிறுவப்படவுள்ளது.

தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் டொபி தைப்பொங்கல் தினத்தன்று விற்பனைக்கு விடப்படும் என்று சபைத் தலைவர் திரு. கே. நடராசா தெரிவித்தார்.

டொபியின் பெயர் 'பாம்டா'.

சுமார் 3 லட்சம் ரூபா செலவில் இத் தொழிற்சாலை அமைக்கப்படும்.

டொபி உற்பத்தி செய்வதற்காக நவீன இயந்திரங்கள் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன.

தொழிற்சாலையை எங்கே அமைப்பது என்பது பற்றி சில தினங்களில் முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது. (இ-எ)

# யாழ். நகரத்திலும் சுற்றுப்புறங்களிலும்

## நேற்றிரவு அதிர் சத்தங்கள்!

யாழ்ப்பாணம்,டிச.14

யாழ்ப்பாண நகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் நேற்றிரவு மக்களை அதிர வைக்கும் சத்தங்கள் விட்டு விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தன.

நேற்றிரவு சுமார் ஏழரை மணியில் இருந்து குண்டுகள் வெடிக்கும் பயங்கரச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன.

அதனைக் கேட்ட மக்

(4-ம் பக்கம் பார்க்க)

# கோஷ்டி மோதலில் அடம்பனில் 3 இளைஞர்கள் பலி

## மக்கள் மத்தியில் பதற்றம்

மன்னார், டிச. 14

மன்னாரில் இரண்டு இளைஞர் குழுக்களிடையே நடைபெற்ற கோஷ்டி மோதல் ஒன்றில் மூன்றுபேர் கொல்லப்பட்டனர் என்று தெரியவருகிறது.

ஓர் அணியைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றோர் அணியினரால் பிடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரி

(4ஆம் பக்கம் பார்க்க)

# சென்னை வாகன விபத்தில் புலி இயக்கப் போராளி பலி!

சென்னை, டிச. 14

சென்னைக்கு அருகே நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தொன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளி ஒருவர் அந்த இடத்திலேயே மரணமானார். மூவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது.

திருச்சி—சென்னை நெடுஞ்சாலையில் பாடலூருக்கும் திருக்காணூருக்கும் இடையே விடுதலைப் புலிகள் பயணம் செய்த வாடகைக்கார் ஒன்றுடன் சென்னை நோக்கி வந்துகொண்டிருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக்கழக பஸ் மோதியதால் இந்த விபத்து நேர்ந்தது.

விடுதலைப் புலிகள் சென்ற வான் ஒன்று விபத்திலிருந்து தப்பியது.

காயமடைந்தவர்கள் திருச்சி அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காரில் பயணம் செய்தவர்களில் காயமின்றித் தப்பிய இருவரிடமிருந்து இயந்திரத் துப்பாக்கி ஒன்றையும் இரண்டு துப்பாக்கிகளையும் காவல்துறையினர் கைப்பற்றினார்கள்.

போராளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகள் சம்பந்தமாக வழக்குப்பதிவு செய்யப்பட்டிருப்பதாக தமிழ்நாடு பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸ்ரீபால் தெரிவித்தார். (இ-எ)

### ✱பிந்திய செய்தி

## பரந்தனிலும் பதற்றம்!

யாழ்ப்பாணம்,டிச.14

நேற்று பரந்தன், சாவகச்சேரிப் பகுதிகளிலும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

பரந்தனில் சில வாகனங்கள் எரிந்துகொண்டிருப்பதாக அங்கிருந்து நேற்று இரவு யாழ் வந்து சேர்ந்த பயணிகள் தெரிவித்தனர்.

பருத்தித்துறை வீதி நேற்றிரவு வாகனப் போக்குவரத்துக்குத் தடைப் பட்டிருந்ததால் அவ்வழியால் வந்த வாகனங்கள் பலாலி வீதியால் சுற்றி யாழ்நகரை வந்தடைந்தன. (இ-10)

# தேவநாயகம்-லக்ஷ்மன் நேற்று சபையில் லடாய்

கொழும்பு, டிச. 14

முட்டாள் போன்று பேசவேண்டாம்.

இப்படி அத்தனகலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி, [illegible] உள்நாட்டு அமைச்சர் திரு. தேவநாயகத்தைப் பார்த்துச் சொன்னார்.

இது நாடாளுமன்ற வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தின் ஒரு கட்டத்தில் இடம் பெற்றது

கிழக்கு மாகாணத்தை இனரீதியில் மூன்று மாகாணங்களாகப் பிரிக்கும் யோசனை இலங்கை அரசின் யோசனை அல்ல என்று திரு. தேவநாயகம் தெரிவித்த போதே, திரு. ஜெயக்கொடி முன் கண்டவாறு சுடச்சுடச் சொன்னார்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு பெங்களூரில் வைத்து வரைபடம் காட்டியது எமக்குத் தெரியும். அந்த வரைபடம் எப்படியானது என்றும் எமக்குத் தெரியும். கிழக்கு மாகாணத்தை மூன்றாகப் பிரிக்கும் யோசனை யாருடையது என்றும் எமக்குத் தெரியும்—

இப்படி திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி தெரிவித்தார்.

# தேசிய கிறிஸ்தவ சங்கக் குழு நேற்று பருத்தித்துறை விஜயம்

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த தென் இலங்கையைச் சேர்ந்த தேசிய கிறிஸ்தவ சங்கக் குழுவினர் நேற்று பருத்தித்துறைக்கு விஜயஞ்செய்தனர்.

இக்குழுவில் குருநாகல் அத்தியட்சாதீன பேராயர் அன்றூ குமாரகே, இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அருட்திரு ஹரல் பெர்னாண்டோ, கிறிஸ்தவ மாணவசங்கப் பிரமுகர் திரு. லக்ஷ்மன் குணசேகரா, அருட்திரு ஆர். எபனேசர் ஆகியோரும் மற்றும் சிலரும் இடம் பெற்றுள்ளனர்.

இவர்களை வண. ஜெபநாயகம், வண கருணைராஜா, திரு. ஆர். ஆர். பிளஞ்சார்ட், திரு. வென். குணரத்தினம் ஆகியோர் பருத்தித்துறைக்கு அழைத்துச் சென்றனர்.

பருத்தித்துறையில் சேதம் அடைந்த வீடுகள் உட்பட பல இடங்களை இவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் உதவியுடன் பார்வையிட்டனர்.

யாழ்ப்பாணத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

14—12—1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:

9.21 முதல் 10.51 வரை

ராகுகாலம்:

4.51 முதல் 6.21 வரை

இவை பகலுக்கும்

இரவுக்கும் பொருந்தும்

திருவெம்பாவை

ஏழாம்நாள்

கார்த்திகை விரதம்

# தண்டனை 3 வாரம்! விளக்க மறியலில் இருந்தது 31 மாதம்!!

கொழும்பு, டிசம்பர் 14

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்டது பற்றி தகவல் கொடுக்கத் தவறிய குற்றத்தை ஒப்புக்கொண்ட காங்கேசன்துறை, தையிட்டியைச் சேர்ந்த நடராசா முரளீதரன் என்பவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யு. சேனநாயக்கா 3 வாரச் சிறைத் தண்டனை விதித்தார்.

தீர்ப்பு வழங்கும் முன்னர் அரச சட்டத்தரணியை நோக்கி நீதிபதி: எதற்காக சந்தேகநபரை 31 மாதகாலம் விளக்கமறியலில் வைத்திருந்தீர்கள்?

அரச சட்டத்தரணி: விசாரணை முடியாததினால்தான் இவ்வளவு நீண்ட காலம் அவரை றிமாண்டில் வைத்திருக்க வேண்டியதாயிற்று.

எதிரி சார்பில் சட்டத்தரணி கே. வி. மகேந்திரன் ஆஜரானார். (இ-ஐ-எ)

GLORIA TRAVELS

● கனடா ● நோர்வே
● பிரான்ஸ் ● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

நோர்வே, கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND) விசா, ரிக்கற்

ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அம்பாறை மாவட்டம்

# முஸ்லிம் மாகாணமாகாது

அம்பாறை, டிச. 14

அம்பாறை மாவட்டத்தை தனி முஸ்லிம் மாகாணமாக அமைப்பது சாத்தியப்படாது.

பிரதி அமைச்சரும் சம்மாந்துறை எம்.பியுமான ஜனாப்.எம். ஏ. மாஜீது உதயன் செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இப்பொழுது சிங்களவரே பெரும்பான்மையினராக இருக்கிறார்கள்.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இன்றைய நிலை இன்னும் மோசமாகும்.

ஆகவே கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் பகுதிகளை ஒன்று சேர்த்து தனி முஸ்லிம் மாகாணமாக கோருவதே இன்று நம் முன் உள்ள சிறந்தவழி.

இனப்பிரச்சினைக்கு 100 சத வீதம் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும்; வேறு வழிகளில் தீர்வு காணப்பட முடியாது.

இப்படி ஜனாப். மஜீது சொன்னார். (உ-எ-14)

## உதுமாலெப்பை மீதான வழக்கு தள்ளுபடி

கொழும்பு, டிச. 14

பொத்துவில் முதலாவது எம் பியாக ஜனாப் உதுமா லெப்பை தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாது என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

மனுதாரரான எ.எல். எம் அகமது வழக்கை வாபஸ் வாங்கியதைத் தொடர்ந்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. (இ-எ-1)

# இறைவனின் பணியே ஆசிரியர்களுக்கும்

## வட்டக்கச்சி வைபவத்தில் உரை

கிளிநொச்சி, டிச. 14

இறைவன் எவ்வாறு குருவாக, ஆயராக, போதகராக முப்பெரும் பணிகளில் பணியாற்றுகிறாரோ அவ்வாறே ஆசிரியர்களுக்கும் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டே ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும்.

கிளிநொச்சி பங்குத்தந்தை வணபிதா ஜேரூ செல்வநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டக்கச்சி புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் பாடசாலை அதிபர் பொன். தில்லைநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வணபிதா தொடர்ந்து பேசுகையில்: ஆசிரியன் ஒரு வழி காட்டும் ஊழியன். மாணவர்களை உயர்த்தும் ஊழியனாகவும், ஒழுக்க சீலனாக மாற்றும் கருவியாகவும் திகழ வேண்டியவன் எனவும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்க நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றது. (இ-76)

## மாநகர சபைக்கு யுனிசெப் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிச 14

யாழ்-மாநகரசபைக்கு மூன்று லட்சம் ரூபா பெறுமதியான நான்கு இரண்டு சில்லு உழவு இயந்திரங்களை யுனிசெப் நிறுவனம் நன்கொடையாக வழங்கி உள்ளது.

இதில் இரண்டு உழவு இயந்திரங்கள் தற்பொழுது நகர் சுத்திகரிப்பு பாவனைக்காக விடப்பட்டுள்ளன.

ஏனைய இரண்டுக்கும் பெட்டிகள் செப்பனிடும் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.


சேவை

மணமகன் – மணமகள் தேவைகளுக்கும் எப்பொருள்களானாலும் ஆதனங்களுட்பட வாங்கவும் – விற்கவும் – திட்டப் பரிசு விபரங்களுக்கும் எம்மை நாடுங்கள். லக்கி பெனிபிட்கோ லிமிட்டட், சந்திக்கு அருகாமையில் கோப்பாய்.


# திருமலை, தலைமன்னார்

## இணைப்பு ரயில்சேவை நாளை முதல் ஆரம்பம்

கொழும்பு, டிச.14

திருகோணமலை தலைமன்னார் இணைப்பு ரயில் சேவைகள் நாளை திங்கள் முதல் ஆரம்பமாகவுள்ளன.

திருமலையில் இருந்து காலை 7.45 க்குப் புறப்படும் ரயில் கல் ஓயாவை காலை 9.40 க்குப் போய் அடையும்.

கல் ஓயாவில் இருந்து காலை 11.40 மணிக்குப் புறப்படும் ரயில் திருமலையை பிற்பகல் 1.27 மணிக்கு அடையும்.

காலை 6 00 மணிக்கு அனுராதபுரத்தில் இருந்து புறப்படும் ரயில் காலை 10 15 க்கு தலைமன்னாரை அடையும்.

காலை 11 35 மணிக்கு தலைமன்னாரில் இருந்து புறப்படும் ரயில் பிற்பகல் 3.56 க்கு அனுராதபுரத்தை அடையும். (உ-எ)

# அராஜகங்களை அம்பலப்படுத்துவதும் ஒருவகைப் போராட்டமே

## பங்குத்தந்தை கூறுகிறார்

கரவெட்டி டிச 14

எமது நாட்டில் நிலவும் பல விதமான அராஜகங்கள் இராணுவத்தினரின் கெடுபிடிகள், கொலைகள் இவை அனைத்தையும் மக்கள் முன் அம்பலப்படுத்துவதும்ஒரு வகையான போராட்டமேயாகும்.

நெல்லியடி பிரஜைகள் குழுவின் காரியாலயத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றிய கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு ஆர். எச். சகாயநாயகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நெல்லியடி – கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள இந்தக் காரியாலய திறப்புவிழாவிற்கு சட்டத்தரணி திரு. வீ. மகாலிங்கம் தலைமை வகித்தார்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை, கட்டைவேலி-மெதடிஸ்த திருச்சபை போதகர் வணபிதா எஸ். கே. கதிர்காமர். வடமராட்சி பிரஜைகள் குழுத்தலைவர் திரு. ஜே. ஜீ. இராஜேந்திரம், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதி திரு. செங்கதிர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். திரு. எஸ். செல்லையா நன்றியுரை வழங்கினர். (இ-70

## செய்திக்கொத்து

### மக்கள் அச்சம்

காங்கேசன் துறை, டிச.14

காங்கேசன் துறை, மயிலிட்டி, பலாலி, வயாவிளான்பகுதிகளில் இரவு பகலாக இடம் பெறும் விமான ஹெலிக்கொப்டர் ரோந்து மக்களை அச்சத்திற்கு உள்ளாக்கி வருகிறது.

பலாலி, காங்கேசன் துறை இராணுவ முகாம்களை சுற்றியுள்ள பகுதிகளில் இந்த ரோந்து கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது.

### தீவுப்பகுதியில் நுளம்புத் தொல்லை

வேலணை-டிசம்பர்-14

தீவுப்பகுதியில் இம்முறை நுளம்புத்தொல்லை அதிகம் இதனைக்கருத்தில் கொண்டு தீவுப்பகுதியின் கரையோரப் பிரதேசங்களாகிய சாட்டி, கெட்டில், செட்டிபுலம், மண்கும்பான் அல்லைப்பிட்டி, சரவணையின் ஒருபகுதி, சோளாவத்தையின் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்கள் மலேரியாப் பிரதேசமாகக் கணிக்கப்பட்டு டி. டி. ரி. மருந்துக் கலவைகள் தற்பொழுது துரிதமாக தெளிக்கப்பட்டு வருகின்றன.

### திருப்பூந்தோட்டம்

யாழ்ப்பாணம், டிச. 14

மானிப்பாய் மருதடி ஆலயத்தில் திருப்பூந்தோட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு வேண்டிய பூங்கன்றுகள், விதைகளைத் தந்து உதவுமாறு பொதுமக்கள் கோரப்பட்டுள்ளனர். (இ)

### தட்டுப்பாடு

கிளிநொச்சி, டிச 14

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம சேவகர்களால் வழங்கப்படும் கிராம சேவகர் நற்சான்றிதழ், வதிவிட அத்தாட்சியை உறுதிப்படுத்தும் சான்றிதழ், அடையாள கார்ட் விண்ணப்பங்கள் என்பன வற்றுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது (இ-76)

## கலாசார அவை இன்று கூடும்

யாழ்ப்பாணம், டிச. 14

தமிழர் கலாசார அவையின் செயற்பாடுகளை மேலும் விஸ்தரிப்பதற்கும் சகல கலைஞர்களையும் இணைத்துச் செயற்படுவதற்கும் அடுத்த வருடத்திற்கான ஆக்க முயற்சிகளை பற்றி ஆலோசிப்பதற்கும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை9 மணிக்கு நல்லூர் கலாசார அவையினர் கூடுகின்றனர்.

நல்லூர் வைமன்வீதியில் உள்ள கலாசார அவை அலுவகத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர் சந்தித்து உரையாற்றுவார். (ஒ)

## கலை, விஞ்ஞான பீட விரிவுரைகள்

யாழ்ப்பாணம், டிச 14.

யாழ் பல்கலைக் கழக கலை, விஞ்ஞான பீட மாணவர்களுக்குரிய விரிவுரை வகுப்புகள் 87ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

சகல மாணவர்களும் விரிவுரைகளுக்கு சமுகம் கொடுக்கும்படி யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் சு. வித்தியானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-10)

## மெதடிஸ்த வாலிப ஒன்றியத்தின் விடிவு நோக்கி

யாழ்ப்பாணம், டிச 14

'விடிவு நோக்கி' எனும் காலாண்டு கிறிஸ்தவ செய்திப் பத்திரிகை யாழ் மெதடிஸ்த சேகர வாலிப ஒன்றியத்தால் வெளியிடப்படவுள்ளது.

இதன் முதல் இதழ் கிறிஸ்மஸ்–– புதுவருட இதழாக வெளிவரவுள்ளது.

பத்திரிகையின் வெளியீட்டு வைபவங்கள் இம் மாதம் 20 ஆம் திகதி வண்ணார்பண்ணை மெதடிஸ்த ஆலயத்திலும் 21 ஆம் திகதி யாழ் கிறிஸ்துநாதர் ஆலயத்திலும், 23 ஆம் திகதி அச்செழு மெதடிஸ்த தேவாலயத்திலும் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளன.

மேற்குறிப்பிட்ட ஆலயங்களில் வெளியீட்டு வைபவத்தின் போது கிறிஸ்மஸ் இசை ஆராதனைகள் நடைபெறும் என வெளியீட்டுக்குழு தெரிவித்துள்ளது. (இ-5)

## மக்கள் முகம்

### கலைவாணி ஐக்கிய நாணய சங்கம்

வட்வெட்டித்துறை, டிச. 14

கொற்றவத்தை கலைவாணி சனசமூக நிலைய ஐக்கிய நாணய சங்க உத்தியோகத்தர்கள் வருமாறு:–

தலைவர்: திரு. வெ. திருநாமம் உபதலைவர்: திரு.சி.செல்லையா காரியதரிசி: திரு.க. தங்கவேல் தனாதிகாரி: திரு. த. கணேசமூர்த்தி.

நிர்வாக அங்கத்தவர்கள்:– திரு.கி. பூபாலன், திரு. சதாசிவம், திரு. கி. மகாலிங்கம். (இ-160)


யாழ்/வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்

ஆண்டு 7 - பிரவேசப் பரீட்சை 20-12-86 சனிக்கிழமை

விண்ணப்பமுடிவு திகதி 17.12 1986

140, மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்

ஆண்டு 6: பிரவேசப் பரீட்சை 27.12.86 சனிக்கிழமை

விண்ணப்பமுடிவுதிகதி 22-12-1986

40, மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்

விண்ணப்பக் கட்டணம்: 5/- ரூபா

-- அதிபர்



தளபாட மலிவு விற்பனை

புதிய, நவீனமான உருக்கு, மரத் தளபாடங்கள் நத்தாரையொட்டி அதிக விலைக் கழிவுடன் விற்பனையாகின்றன. பல டிசைன்களில் மேசைகள், கதிரைகள், T.V.Stands, Book Rack, கட்டில் மற்றும் பல கவர்ச்சிகரமான பொருட்கள்.

விலை குறைப்பு கையிருப்பு உள்ளவரை மட்டுமே

டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்

476, பிரதான வீதி, கண்டுக்குளி

(சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)



G.A.Q.

87ஆம் ஆண்டிற்கான மீட்டல் வினாவிடை வகுப்புக்கள்

88ஆம் ஆண்டிற்கான 2ஆம் பிரிவு புதிய வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

விபரங்களையும் அனுமதிகளையும் இலவசமாக நேரில் பெற்றுக்கொள்ளவும்.

அதிபர்,

உயர் கலைக் கல்லூரி

73, ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்.



1987 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட அரச மரவேலைப் பாடசாலைகளின் ஒரு வருட மரவேலைப் பயிற்சிக்கு

பயிலுநர்களைச் சேர்த்தல்

சிறு கைத்தொழில் திணைக்களத்தினால் நடாத்தப்படும் யாழ்ப்பாணம், மானிப்பாய், சுன்னாகம் இயந்திர மரவேலைப் பாடசாலைகட்கு மேற்சொல்லப்பட்ட பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலும் விபரங்களிற்கு அண்மையில் உள்ள மரவேலைப் பாடசாலை பொறுப்பதிகாரியையேனும் அல்லது சிறு கைத்தொழில் உதவிப்பணிப்பாளர், கச்சேரி, யாழ்ப்பாணத்திலோ நேரடியாகவோ கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளவும். பயிற்சிக் காலத்தில் உதவிப்பணம் வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி: 24-12-1986.

சி. ஆர். வேலாயுதபிள்ளை,
உதவிப் பணிப்பாளர்,
சிறுகைத்தொழில் பகுதி,
கச்சேரி, யாழ்ப்பாணம்.



நத்தார் புது வருடவிசேஷ வாய்ப்பு

மாபெரும் மலிவு விற்பனை

டிசெம்பர் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை

★ ஆண்கள் ★ பெண்கள் ★ சிறுவர்களுக்கு

உகந்த சிறந்த துணிவகைகளுக்கும் தைக்கப்பட்ட உடைகளுக்கும் மற்றும் லேடன் தயாரிப்புகளுக்கும் உடன் நாடுங்கள்

லேடன் காமென்ஸ்

235, ஆஸ்பத்திரி வீதி,
(சத்திரச் சந்தி அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 23603


# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## அறவழிப் போராட்டக் குழுவின்

# தமிழ் சிறுவர் தின விழா

சாவகச்சேரி, டிச 14

அறவழிப் போராட்டக் குழுவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள, தமிழ் சிறுவர் தின விழா நிகழ்ச்சி நாளை திங்கட்கிழமை பி. ப 1-30 மணிக்கு கைதடி, நுணாவிலில் அமைந்திருக்கும் அறவழிப்பணி மனைக்கு அருகில் ஆரம்பமாகின்றது.

அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்படுகின்ற 25 பாலர் பாடசாலை சிறுவர்களும் ஏனைய பாலர் பாடசாலை சிறுவர்களுமாக மொத்தம் சுமார் 1500 சிறுவர்கள் நிகழ்ச்சியில் பங்குகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நிகழ்ச்சிகளின் போது பிரதம விருந்தினர்களாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வீ. எம் பஞ்சலிங்கம், கல்விப்பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம், அறநெறிக்காவலர் பேராசிரியர் கே. நேசையா, பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. கே. நடராசா, மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா, மருத்துவப்பீடாதிபதி டாக்டர். நந்தி ஆகியோர் பங்கு பற்றுவர்.

இந் நிகழ்ச்சிகளில் தமிழ்ப் போராளிகள் அமைப்பின் பிரதிநிதிகளும் பங்கு பற்றுவர்.

சிறுவர்களின் சமாதான ஊர்வலம் நுணாவில் அம்பாள் விளையாட்டு மைதானத்தில் இருந்து பிற்பகல் 1-30க்குப் புறப்பட்டு, கண்டி வீதி வழியாக விழா மைதானத்தை வந்தடையும்.

ஊர்வலத்தின் முடிவில், சிறுவர்கள், தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை, விழா மைதானத்தில் யாழ் அரசாங்க அதிபர் திரு வீ. எம். பஞ்சலிங்கத்திடம் கையளிப்பர்.

இரண்டாவது நிகழ்ச்சியாக சிறுவர்களின் பிரார்த்தனை மைதானத்தில் இடம்பெறும்.

அடுத்த நிகழ்ச்சியாக, சிறுவர்களின் பொதுக் கூட்டம் இடம்பெறும்.

இப் பொதுக் கூட்டத்திற்கு செல்வன். ரி. கலானந்தனும், செல்வி. தி தமிழினியும் தலைமை வகிப்பார்கள் இக் கூட்டத்தில் சிறுவர்கள் உரைநிகழ்த்துவர்.

பின்னர் அறவழிப் போராட்டக் குழுவின் பாலர் பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு ஆரம்ப பாடசாலைக்குச் செல்கின்ற 300க்கு மேற்பட்ட சிறுவர்களைக் கௌரவிக்கும் வகையில், அவர்களுக்குப் பரிசுப் பொருட்களும் வழங்கப்படும்.

அறவழிப் பத்திரிகை வெளியீடு, கலை நிகழ்ச்சிகள் பொதுக் கூட்டம் ஆகியவையும் இதன் பின்பு நடைபெறும். (இ-31)

## கடும் சோதனை

யாழ்ப்பாணம், டிச. 14

ஆனையிறவு இராணுவ முகாமைத் தாண்டிச் செல்லும் பயணிகள் தற்பொழுது கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

பஸ்களில்செல்லும் பயணிகள் அனைவரும் கீழே இறக்கப்பட்டு தனித்தனியாக விசாரணைக்குட்படுத்தப்படுகிறார்கள்.

நேற்று முதல் நடைமுறைக்கு வந்த இந்த சோதனைமுறையால் பல... (உ-10)

## உயிர்ப்புகள் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிச 14

'உயிர்ப்புகள்' நூல் வெளியீடு இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணியளவில் கட்டைவேலி-நெல்லியடி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

சிறுகதைகளும் மதிப்பீடுகளும் பற்றியதே இந்த நூல்.

நிகழ்ச்சிக்குச் சங்கத் தலைவர் திரு.த. சிதம்பரப்பிள்ளை தலைமை வகிப்பார்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி திரு. க. வீ. ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா சிறப்புரை வழங்குவார். முதல் பிரதியை திரு. ம. சிவராசா பெற்றுக்கொள்வார்'

கலாசாரப் பெருமன்றம், கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியன [illegible] நிகழ்ச்சியை [illegible] ஒழுங்கு செய்துள்ளது. (இ-எ)

## ஆஸ்பத்திரி தொலைபேசிக்கு மீண்டும் புத்துயிர்

யாழ்ப்பாணம், டிச.14

யாழ் ஆஸ்பத்திரி தன்னியக்க தொலைபேசிகள் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளன.

கடந்த இரண்டு வருடகாலமாக ஆஸ்பத்திரி தன்னியக்க தொலைபேசி இணைப்பகத்தின் 'பற்றறிகள்' பழுதடைந்த நிலையில் இருந்தன

எனினும் அரைகுறையாக செயல்பட்டு வந்த இந்த தொலைபேசித் தொடர்புகள் மீண்டும் சீராக இயங்கத் தொடங்கி உள்ளன.

யாழ் ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரிச் சங்கம்எடுத்துக்கொண்ட விடாமுயற்சி காரணமாகவும், தொலைத் தொடர்பு ஊழியர்களது விடாமுயற்சி காரணமாகவுமே இத்தொலைபேசிகள் மீண்டும் சீரமைக்கப்பட்டுள்ளன. (இ-10)

## சடலம் அரச செலவில் அடக்கம்

யாழ்ப்பாணம், டிச. 14

அடையாளம் காணப்படாத வயோதிபரின் சடலம் ஒன்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

கடந்த செவ்வாய்க் கிழமை தொண்டமானாறு இராணுவ முகாம் அருகே சென்ற வயோதிபர் ஒருவர் சிப்பாய்களின் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

அவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த போதும் எவரும் உரிமை கோரவில்லை. (இ – 10)


விற்பனையாளர் தேவை

அதிஷ்டலாபச் சீட்டு விற்பனை செய்ய பின்வரும் தொகுதிகளில் உள்ள ஆண், பெண் இருபாலாரும் உடனடியாகத் தேவை.

யாழ்ப்பாணம்
பண்டத்தரிப்பு
சங்கானை
மானிப்பாய்
சுன்னாகம்
காரைநகர்
குருநகர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஸ்ருடியோ வீனஸ்

(ஸ்ரீதர் சினிமா அருகாமையில்)

266/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



விற்பனைக்கு

பின்வருவன விற்பனைக்குள்ளன:

SUMEBT Domestic Mixer (புதியது)
SANSUI Tuner Amp. Cassette Deck. Record Player, Speakers.
SONY 6-band Radio
DEEP FREEZER (West point 6 9 c:ft)
A–40 Delivery Van
TYPEWRITER (Portable)

dyn ads 476, பிரதான வீதி, கண்டுக்குளி-
(சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

தன்னைத்தான் புகழுகின்றவன் உத்தமனல்லன், சர்த்தரால் புகழப்படுகின்றவனே உத்தமன். — பைபிள்.


உதயன்

உண்மை - நிர்மலம் - ....

இல.15 உஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம். 14-12-1986 த.பெ இல. 23


# வல்லரசுப் போர் தென் கிழக்கு ஆசியாவிலா?

ஸ்ரீலங்கா தனது நட்பு நாடு ஒன்றுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யவேண்டும் அதற்குரிய சந்தர்ப்பம் இதுவே ஆகும்

இவ்வாறு ஸ்ரீலங்காவுக்குப் 'புத்திமதி' கூறியிருப்பது அமெரிக்காவின் வால்பிடியான இஸ்ரவேல்.

முதலில் திடீர் பயணம் என்றும் பின்னர் திட்டமிடப்பட்ட விஜயம்தான் என்றும் அறிவிக்கப்பட்ட தமது சமீபத்திய கொழும்பு வருகையின் போது இஸ்ரவேலிய ஜனாதிபதி, செயிம்ஹெர்ஸோக்கி இந்த அசல் நாசகார ஆலோசனையை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு கூறிப் போயிருக்கிறார்.

சார்க் மாநாட்டில் பெரும் தத்துவப் பகட்டுப் பேசிய ஜே. ஆர் கொழும்பு வந்து சேர்ந்ததும் முதலில் ஓதப்பட்ட ராஜீக மந்திரம் பாதுகாப்பு ஒப்பந்த யோசனைதான்.

நட்புநாடு என்று இஸ்ரவேல் குறிப்பிட்டிருக்கும் நாடு அமெரிக்காவைத் தவிர வேறெதுவுமாக இருக்க முடியாது எனக் கருதலாம்.

அப்படி ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஸ்ரீலங்கா உடனடியாக வெளிப்படையாகச் செய்யமுடியுமா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று.

இலங்கை அணிசேரா இயக்கத்தில் அங்கம் வகிக்கிறது. அந்த அணியில் உள்ள நாடுகள் அதில் அங்கம் வகிக்காத எந்த வல்லரசுடனும் பாதுகாப்பு ஒப்பந்தம் எதையும் செய்வது தடுக்கப்பட்டிருக்கிறது

ஆனால் அணிசேரா இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒன்றான இந்தியா சோவியத் ரஷ்யாவுடன் நல்லுறவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. அதே பாணியில் தானும் அமெரிக்காவுடன் ஒரு நல்லுறவு ஒப்பந்தத்தைச்செய்தால் என்ன என்று ஸ்ரீலங்காவுக்கு நப்பாசை பிறக்காமல் இருக்க முடியாது.

இனப் பிரச்சினையை அது இழுத்தடிக்கும் போக்கும்,இராணுவ நடவடிக்கை என்றுஅடிக்கடி சுருதி போடும் தன்மையும் ஸ்ரீலங்காவுக்கு அப்படி ஒரு உள்நோக்கம் உண்டு என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியாகப் புலப்படுத்துகிறது. இஸ்ரவேல் போடும் தூபம் ஸ்ரீலங்காவின் ஆசைக்குச் செயலுருக் கொடுக்கத் தூண்டலாம்.

நல்லுறவு ஒப்பந்தம் என்ற பெயரில் அமெரிக்காவைத் தனது உத்தியோகபூர்வ, ஆத்ம நண்பனுக்குவதற்கு அது முனையலாம். அமைச்சர் அத்துலத்தின் அமெரிக்க விஜயம் அதனோடு சம்பந்தப்பட்டது தானோ, ஆருக்குத் தெரியும்!

இந்து சமுத்திரப் பகுதியை அமைதிப் பிரதேசமாக்க வேண்டும் என்று போலி ஓலம் போடும் நாடுகளில் ஸ்ரீ லங்காவும் ஒன்று. ஆனல் இந்தப் பிராந்தியத்தில் உள்ள ஒவ்வொரு நாட்டின் நடத்தையும், குழுச் சேரும் தன்மையும் ஊருக்கடி உபதேசம் உனக்கல்ல என்றவாறு உள்ளது.

இந்தியாவும் பாகிஸ்தானும் நிரந்தரப் பகைமை நாடுகளாக இருக்கின்றன. பாகிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து வெளிப்படையாக உதவி பெறுகிறது. அதற்கு அயலில் உள்ள ஆப்கானிஸ்தானில் ரஷ்யச் செல்வாக்கு ஆட்சி செய்கிறது. சீனவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் மீண்டும் பொருதுதல் ஏற்படக் கூடிய நெருக்கடி நிலைமை உருவாகி வருகின்றது.

எப்படியோ அமெரிக்காவும் ரஷ்யாவும் சுற்றிச் சுற்றி இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தமது கால்களைப் பதித்து வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில் தென் கிழக்காசியாவில் தான் முதலாவது வல்லரசுப் போர் தொடங்குமோஎன்று எண்ணவேண்டியும் உள்ளது.

இது, இப்பிராந்தியத்தில் வாழும் மக்களுக்குப் பெரும் ஆபத்தைத் தர வல்லது. அழிவையும் தேடிக் கொடுக்கும்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் வல்லரசுகளுடன் பாதுகாப்பு உடன்பாடுகளைச் செய்வதானல் 'சார்க்' அமைப்பும், 'ஆசியான்' சங்கமும், அணிசேரா இயக்கமும் ஏன்? வெறும் மேடைப் பேச்சுக்கும், கூடிக் குலாவலுக்கும், வேஷம் போட்டு நாடகம் ஆடவுமா? அவை வெறும் அர்த்தமற்ற அமைப்புகள்.

தென்கிழக்காசியாவில், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வல்லரசுப் போர் ஒன்றை உருவாக்கி நம்மை நாமே அழித்துக் கொள்ள வேண்டுமா?

## ராஜீவ் எச்சரிக்கை

ஸ்ரீநகர், டிச. 13

நான்காவது யுத்தம் ஒன்று பாகிஸ்தானுடன் வந்தால் இந்தியா நல்ல பாடம் ஒன்றைப் படிப்பிக்கும்.

இப்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று ஜம்மு-காஷ்மீரில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் எச்சரித்தார்.

பாகிஸ்தான், இந்திய எல்லைக்குள் ஊடுருவல் நடத்த முயற்சிப்பதாகவும் திரு ராஜீவ் காந்தி குற்றஞ்சாட்டினர். (ஒ)

## பலர் கைது

கேப்டவுன் ,டிச. 13

தென் ஆபிரிக்கா ஆட்சியாளரை எதிர்த்து வந்த பெரும்பான்மையோர் பலரை பாதுகாப்புப்படை கைது செய்துள்ளது.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், தொழிற் சங்கவாதிகள், மாணவர்கள் ஆகியோர் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர்.

கிறிஸ்மஸ் பண்டிகையின் போது நாடுதழுவிய கிளர்ச்சிகள் நடைபெறுமல் தவிர்ப்பதற்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக தென் ஆபிரிக்கா அறிவித்தது. (ஒ)

**உதயன் ஞாயிறு விவரணச் சிறப்பம்சம்**

# புலன் இழந்தோருக்கு புது உலகம் காட்டும் நவீல்ட் பாடசாலை



பார்வையை முற்றாக இழக்காத மாணவர்கள் பூதக்கண்ணாடியின் உதவியுடன் உற்றுப் பார்த்து எழுதும் காட்சி.

மகாத்மா காந்தி கூறியது போல் தீயனவற்றைப் பாராது; தீயனவற்றை பேசாது; தீயனவற்றை கேளாது.

தீமைகளால் தேய்ந்து போன இச்சமுதாயச் சாக்கடையில்; பூக்கடைகளாக வாழும் புண்ணிய சமூகம் ஒன்று உண்டு.

அவர்கள்தான் கைதடி நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலை மாணவர்கள்.

அவர்களது உலகம் ஒரு தனி உலகம்.

சைகை மொழிதான் செவிப்புலன் இழந்தோரின் தாய்ப் பாஷை!

### மெய்சிலிர்க்க வைத்த அந்தக் கலை நிகழ்ச்சி

கால்போன போக்கிலே அவர்களது பாதை. அவர்கள் வார்த்தைகளை இழந்த மொழிக் கவிதைகள். சூரியனை இழந்த சந்திர முகங்கள் அவர்கள் ஆண்டவன் போட்ட அவசரக் கோலங்கள்.

பகலுக்கும் இரவுக்கும் வேறுபாடு தெரியாத இமைகளே சுமைகளான அந்த மாணவர்களின் நத்தார் கலைவிருந்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது.

பார்வையிழந்தோரின் பாடல்களும்; பேச்சிழந்தோரின் ஆடல்களும் எம்மை மெய்சிலிர்க்க வைத்தன.

'தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ நினைக்கலாமா...' என்ற பாடல் வாத்திய இசை நிகழ்ச்சி; அவர்கள் கேள்வி, பார்வை இழந்தாலும் உணர்வுகளையும் திறமைகளையும் இழக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டியது

எந்த மேடை, எவர் பார்வையாளர்; எதுவுமே தெரியாத நிலையில் விழியிழந்தோர் பாடல்கள் வழங்க—

அந்தப் பாடல்களுக்கு எந்தப்பாடல்களுக்குநாம் ஆடுகிறோம் என்று தெரியாத நிலையில் கேள்விழந்தோர் அழகாக அபிநயிக்க;

பார்வையாளர் நாம் மெய்சிலிர்த்து கைதட்ட மறந்து கல்லாகி நின்றோம்.

இந் நிகழ்ச்சிகளுக்காய் அவர்களை ஆயத்தப் படுத்திய ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டப் பட வேண்டியவர்களே.

### அதிபர் டேவிட் சொன்னது

நவீல்ட் பாடசாலை அதிபர் திரு ஜே எஸ் டேவிட் அவர்களைச் சந்தித்து பாடசாலை, மாணவர்கள் பற்றி வினவிய போது, அவர் கூறியவற்றை தொகுத்துத் தருகிறோம்.

1956 ஆம் ஆண்டு முதல் புலன் இழந்தோர் தமிழ் நிலையமாக இது உருவானது.

அரசின் 30 வீத பண உதவியுடனும் வெளிநாடுகளிலுள்ள பொது நல ஸ்தாபனங்களின் உதவியாலும் இயங்கி வருகிறது இப்பாடசாலை.

மாணவர்களின் பெற்றோர்கள் உள்ளூர் வாசிகளின் உதவியாக 5 வீத மான பண உதவியே கிடைத்து வருகிறது.

ஒரு மாணவருக்கு 4 ரூபா வீதம் நாளொன்றுக்கு அரசு அனுமதிக்கிறது. ஆனல் 15 ரூபா வரை நாளொன்றுக்கு தேவைப்படுகிறது.

இங்கே 246 செவிப் புலன் இழந்த மாணவர்களும், 36 விழிப்புலன் இழந்த மாணவர்களும் உள்ளனர்.

இவர்களுக்காக 40 ஆசிரியர்களும் பல விடுதி ஊழியர்களும் கடமையாற்றுகின்றனர்.

மாணவர்கள் விடுமுறை காலங்களில் வீடுகளுக்கு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

பார்வைஇழந்த மாணவர்களுக்கு பிறெயில் எழுத்து வாசிப்புப் பாடங்களும்; செவிப் புலன் இழந்த மாணவர்களுக்கு சைகை மொழிப் பாடங்கள், வாய்ப்பேச்சு பயிற்சிப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

தற்போதுள்ள கல்வி முறையில் இவர்களது 8 ஆம் வகுப்பு; கல்வி அமைச்சின் 5 ஆம் வகுப்புக்கு சமனனது,

தொடர்ந்து வரும் காலங்களில் அரசின் பொதுப் பரீட்சைகளில் மாணவர்கள் தோற்ற வழி செய்யப்படவுள்ளது.

இங்கிருந்து வெளியேறிய பல மாணவர்கள் பல திணைக்களங்களில் பணியாற்றுகின்றார்கள். பல்கலைக் கழகத்திலும் ஒரு மாணவன் பட்டப் படிப்புப் பயின்று வருகிறார்.

### இந்தியா முன்மாதிரி

இந்தியாவின் சகல அலுவலகங்களிலும் இரண்டு வீதம் ஊனமுற்றோருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோல் இலங்கையிலும் செயல்படுத்த வேண்டும்.

செவிப்புலன் அற்றோர் மட்டும் சைகை மொழியைப் பயிலுவதால் பயன் இல்லை.

அவர்களது உரையாடும் உலகம் குன்றிவிடுகிறது.

பெற்றோர்களும் பொதுமக்களும் அவர்களது சைகை மொழியை அவசியம் அறிந்திருக்க வேண்டும்.

### கரோல் நிகழ்ச்சியில் அவர்கள் கலைத்திறன் நெஞ்சை உறையவைத்தது

சைகை மொழி அவர்களைவிட பொதுமக்களால் இலகுவில் பயிலக் கூடியதொன்று

### மேலதிக மொழி

மேலைத்தேய நாடுகளில் மாணவர்கள் மேலதிக மொழியாக சைகை மொழியைப் பயில்கிறார்கள்.

வெள்ளைப் பிரம்புடன் உலாவிவரும் விழிப்புலன் இழந்தோருக்குத் தேவையான சகல உதவிகளையும் முன்னின்று செய்யும் உள்ளம் படைத்தவர்களாக நாம் மாறவேண்டும்.

பல பெற்றோர்கள் புலனிழந்த தங்கள் பிள்ளைகளை சமூகத்திற்குக் காட்ட வெட்கப்படுகிறார்கள்.

இது அவர்களின் தாழ்வு மனப்பான்மையை வளர்ப்பதுடன்; திறமைகளைக் குன்றச் செய்கிறது.

அவர்களும் சமுதாயத்தில் ஓர் அங்கம் என மதித்து அவர்களது ஆற்றல்களை வளர்க்க ஆவன செய்ய வேண்டும்.

### சில பெற்றோரின் மனே நிலை

மேலும் சில பெற்றோர்கள் குறைபாடுள்ள தங்கள் பிள்ளைகளை எட்டு வயதுவரை பாடசாலைக்கு அனுப்பவோ, வைத்திய பரிசோதனை செய்யவோ முயல்வதில்லை.

சாத்திரங்களை நம்பி; பிள்ளைகளின் இரகநிலை மாறும் என காத்திருந்து ஏமாறுகிறார்கள்.

இதைத் தவிர்த்து பெற்றோர் தமது புலன் இழந்த பிள்ளைகளை மிகச் சிறிய வயதிலேயே பள்ளிக் கூடத்தில் சேர்க்க முயல வேண்டும்.

இதனல் அவர்களது அறிவு இலகுவில் விருத்தியாவதுடன்; சில வேளைகளில் செவிப்புலன் இழந்த மாணவர்களால் பேசவும் முடிகிறது.

எனவே விழிப்புலன், செவிப்புலன் இழந்தவர்களின் எதிர்காலம் பெற்றோர்; பொதுமக்கள் கரிசனையிலும்; கவனிப்பிலுமே பெரிதும் தங்கியுள்ளது,

இப்படி திரு. அதிபர் ஜே. எஸ். டேவிட் கூறினர். (இ-5)

**பேட்டி: எஸ். ஜே. பி. ரட்ணதுரை**

## வரலாற்றுப் பின்னேக்கு

### ஈழம் + ஸ்ரீலங்கா = இலங்கை

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் இலங்கைத் தீவில் வாழ்ந்துவந்துள்ளனர். தற்போதைய வடக்கும் கிழக்கும் இணைந்த பகுதி நீண்டகாலமாக தமிழ் இராச்சியமாக இருந்து வந்தது.

கி பி.1505ஆம் ஆண்டு போர்த்துக்கீசியர் இலங்கையின் தென் பகுதியைக் கைப்பற்றினர் 1619ஆம்ஆண்டேயாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கீசியரிடம் வீழ்ந்தது. போர்த்துக்கீசியரும், அதன்பின்னர் ஆட்சிசெய்த ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும்கூட (சிலவருடங்களுக்கு) தமிழர் இராச்சியத்தையும் சிங்களவரது இராச்சியங்களையும் வெவ்வேருகவே ஆண்டனர். 1983 ஆம் ஆண்டிலேதான் ஆங்கிலேயர் தங்களது நிர்வாக சௌகரியத்திற்காக எல்லா இராச்சியங்களையும் இணைத்தனர்.

எனவே, தற்போது தமிழர் கோரும் 'ஈழம்' ஒருபிரிவினைக் கோரிக்கை அல்ல. இழந்த தங்களது பூர்வகால தன்னிறைமை மிக்க நாட்டை மீளப்பெறுவதற்கான போராட்டமே அது இதற்கு அவர்களுக்குச் சட்ட முறையிலான உரிமை உண்டு.

1948ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றபோது அமைக்கப்பட்ட இலங்கைத்தீவின் ஒருமைப்பாட்டின் அடிப்படையிலான அரசியல் யாப்பினைத் தமிழர்கள் ஏற்றுக் கொண்டிருந்தாலும், அந்த யாப்பு 1972ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியினல் மீளப்பெறப்பட்டது.

1972ஆம் ஆண்டு திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சியினலும் பின்னர் 1978ம் ஆண்டு ஜே. ஆர். ஆட்சியினலும் அமைக்கப்பட்ட புதிய அரசியல் யாப்புகளுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகளின் ஒப்புதல் இருக்கவில்லை. இவற்றை வகுத்த அரசியல் நிர்ணயசபைகளைத் தமிழ்ப் பிரதிநிதிகள்பகிஷ்கரித்தனர். எனவே தமிழர் இந்த யாப்புகளினதும், இவற்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட அரசுகளினதும் ஆதிக்கத்திற்கு உட்படமாட்டார்கள்.

எனவே ஈழம் என்பது தமிழரின் பாரம்பரிய தாயகத்தையும்,ஸ்ரீலங்கா என்பது இலங்கைத்தீவின் சிங்களப் பகுதிகளையும் ஸ்ரீலங்கா அரசு என்பது சிங்களப்பகுதிகளின் அர

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிம்சோனின் ஜெபம்!

'இந்த ஒரு விசை மாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே பலப் படுத்தும்' (நியா 16:28)

சிம்சோனின் ஜெபம் நம் உள்ளத்தையெல்லாம் உருக்குகிறது! கண்கள் பிடுங்கப்பட்டு, கைகளில் வெண்கல விலங்கிடப்பட்டு, நம்பிக்கையை எல்லாம் இழந்து கேலி பரிகாசப் பொருளாய்ப் போய்விட்ட இஸ்ரவேலின் மாபெரும் பெலவானன சிம்சோன் தன் கடைசி ஜெபத்தை மிக உருக்கத்தோடு ஏறெடுத்தான்.

**ஞானக்கதிர்**

பூமியில் அவன் எல்லாவற்றையும் இழந்து போயிருந்தாலும் ஜெபிக்கும் உள்ளத்தை இழந்து போய் விடவில்லை. மனதுருகி ஜெபத்தைக் கேட்கும் கர்த்தரின் காருண்யத்தையும் இழந்து போய் விடவில்லை! கடைசி மூச்சு இருக்கும்வரை நம்பிக்கையிருக்கிறது!

தேவ பெலத்திற்காக தேவனிடம் கெஞ்சி, கர்த்தராகிய ஆண்டவரே, நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப் பெலிஸ்தர் கையிலே பழிவாங்கும் படிக்கு இந்த ஒரு விசை மாத்திரம் என்னை நினைத்தருளும் என்றான்.

அது பழிவாங்கத் துடிக்கும் ஜெபமாயிருந்த போதிலும் கர்த்தர் அதைக் கேட்டு அவனைப் பெலப்படுத்தினர்.


ஆனல் இதைப் போலொத்த சூழ்நிலையில் கிறிஸ்து சிலுவையில் ஜெபத்தை நினைவு கூர்ந்து தியானியுங்கள். அவர் கைகால்கள் ஆணிகளால் கடாவப்பட்டிருந்தது.

முள்முடி சூட்டப்பட்ட அவர், தன் முகத்தை எச்சிலுக்கும் அவமானத்திற்கும் மறைக்கவேயில்லை. அந்த அகோர வேதனையின் மத்தியிலே அவர் பழிவாங்க ஜெபிக்காமல், ''பிதாவே. இவர்களுக்கு மன்னியும்!'' என்றல்லவா ஜெபித்



தார்! ஆம்! கிறிஸ்துவின் ஜெபம் கேட்கப்பட்டது. அந்த ஜெபத்தின் புண்ணியத்தால் நாம் பாவம் நீங்கினவர்களாக, சுத்திகரிக்கப்பட்டவர்களாயிருக்கிறோம். (இ)

**பொய்யாமொழி**



**குறள்:**

கூத்தாட்டு அவைக் குழாத்தற்றே
பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளந் தற்று.

**பொருள்:**

பெரிய செல்வம் வந்து சேர்தல் கூத்தாடுமிடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்றது; அது நீங்கிப் போதலும் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப்போன்றது.

# ஏரோபுளட் விமானம் வீழ்ந்து நொருங்கியது

## கி.ஜேர்மன் பயணிகள் பலர் பலி?

மாஸ்கோ, டிச,13

ரஷ்யாவிற்குச் சொந்தமான 'ஏரோ புளட்' விமானமொன்று கிழக்கு பெர்லினில் வீழ்ந்து நொருங்கியதால் அதில் பயணம் செய்த 82பேரில் பலர் மரணமாகியிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

பயணிகளில் பலர் கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பேர்லின் மருத்துவமனையில் உயிர் தப்பிய எட்டுப்பேர் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த விமானத்தில் 73 பயணிகளும் 9 விமான பணியாளர்களும் இருந்தனர்.

விமானத்தின் சேதமுற்றபகுதிகளில் இருந்து உயிர்தப்பிய 17பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.(ஒ)

## கருணுநிதி உண்ணுவிரதம்

சென்னை, டிச. 13

கடலூர் சிறையில் தி. மு. க. தொண்டர் ஒருவரின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்து சென்னை மத்திய சிறைச்சாலையில் உள்ள தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணநிதியும் வேறு முக்கியஸ்தர்களும் நேற்று உண்ணுவிரதமிருந்தனர்.

கடலூர் சிறையில் மரணமுற்ற தி. மு. க தொண்டர் கலிய பெருமாள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர். (ஒ)

# எய்ட்ஸ்நோய் தடுப்பு மருந்துவர இன்னும் 5ஆண்டுகள் செல்லும்

## இதுவரை 36,539பேர் பாதிப்பு

ஜெனீவா, டிச.13

எய்ட்ஸ் நோயை துப்பரவாகக் குணமாக்கக் கூடிய மருந்து இன்னும் ஐந்து ஆண்டுகளில் பாவனைக்கு விடப்படும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் எய்ட்ஸ் தடுப்புப் பிரிவு இயக்குநர் இத்தகவலை வெளியிட்டார்.

எய்ட்ஸ் தடுப்பு மருந்தைக் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சி வேலைகள் தொடங்கிவிட்டன.

தற்சமயம் குரங்குகள் ஏனைய மிருகங்கள் மீது இது சம்பந்தமான பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்னும் ஒரு வருடத்தில் மனிதன்மீது பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பெரும்பாலும்5ஆண்டுகளில் எய்ட்ஸ் தடுப்பு மருந்து மக்களின் பாவனைக்கு விடப்படும்.

இப்படி உலக சுகாதார ஸ்தாபன இயக்குநர் அறிவித்தார்.

உலக சுகாதார ஸ்தானத்துக்கு இது வரை கிடைத்த தகவலின்படி 110 நாடுகளைச் சேர்ந்த 36,539 பேர்தான் எய்ட்ஸினல் பீடிக்கப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இவர்களில் அரைவாசிப் பேர் இறந்திருக்கலாம் என்று உலக சுகாதார ஸ்தாபன இயக்குநர் தெரிவித்தார்.(இ-எ)

## அமெரிக்காவை ஆதரிக்கவில்லை

புறாசெல்ஸ், டிச. 13

வட அத்திலாந்திக் உடன்படிக்கை நாடுகளின் 16 வெளி விவகார அமைச்சர்கள் அணு ஆயுத கட்டுப்பாடு மீதான அமெரிக்காவின் கருத்துக்களை ஆதரிக்கவில்லை.

பெல்ஜியத்தில் நடைபெற்ற இரண்டு நாள் கருத்தரங்கில் இந்த வெளிவிவகார அமைச்சர்கள் கலந்து கொண்டிருந்தனர். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. D. P. M. Parts I & II
A. A. T. All Stages
I. A. B. All Stages
Commencement: 6 - 12 - 86
If you can find a better Course joint it.
**Cantabia Institute**
(shoot of Oxonia, Colombo.)
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

# உதயன்

14 : 12 : 1986 ஞாயிற்றுக்கிழமை

I C M A (New Syllabus)
Stage - I Rs. 800-00
Stage - II Rs 1000-00
(All subject will be taught)
Commencement: 6-12-86
Dedicated lectures Safe place
Reasonable fees
Join the leaders
**Cantabia Institute**
(shoot of Oxonia, Colombo.)
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

# எமது கொள்கையில் இருந்து இம்மியளவும் விலகமாட்டோம்

## தமிழீழத் தாயகமே இலட்சியம்

### பருத்தித்துறை வைபவத்தில் கிட்டு உரை

பருத்தித்துறை, டிச. 14

நாம் எமது கொள்கையிலிருந்து இம்மியளவும் விலகமாட்டோம். தமிழீழத் தாயகம் அமைப்பது தான் எமது இலட்சியம்.

யாழ் மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதி திரு. கிட்டு இவ்வாறு கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை கிராமக்கோட்டுச் சந்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிராந்திய தளபதி லெப் கேர்ணல் விக்டர் மற்றும் விடுதலைப் போரில் அர்ப்பணமாகிய விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் அனைவரையும் நினைவு கூரும் முகமாக அமைத்துள்ள நினைவுத் தூபியை கப்டன் பண்டிதரின் தாயார் திருமதி சி. மகேஸ்வரி அம்மா திறந்து வைத்தார்.

இவ்விழா பருத்தித்துறை புலோலி தெங்கு பனம்பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் திரு. கே. கணேஸ் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் திரு. கிட்டு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

யாழ் குடாநாட்டிலுள்ள இராணுவ முகாம்களில் இருந்து சிப்பாய்கள் வெளியேறாமல் கடந்த ஒரு வருடகாலமாக எமது போராளிகள் பாதுகாப்பு அரண்களை அமைத்து காவல் செய்கின்றார்கள். இன விடுதலை போரில் இதுவரை 882 தமிழீழ விடுதலைப் புலிகள் வீர மரணமடைந்துள்ளனர்.

ஒரு போராளி இறக்கும்போது எமது இயக்கத்தில் சுமார் பத்துப் போராளிகள் வரை சேர்ந்துகொள்கிறார்கள். எமது இயக்கத்தின் ஒரு புலி உள்ளவரை நாங்கள் மக்களைப் பாதுகாக்க போரிட்டே தீருவோம்.

எமது இயக்கக் கட்டுப்பாட்டின்படி தளபதியின் ஆணைப்படி எந்தவொரு போராளியும் மோதல் நடைபெறும்போது பின்வாங்கக் கூடாது.

அவ்வாறு புறமுதுகு காட்டி பின்வாங்கும் போராளியை நாம் உடனடியாக இயக்கத்திலிருந்து நீக்கிவிடுவோம். எமது இயக்கப் போராளி, இயக்கத்தில் சேரும்போதே தன்னை தமிழீழ மண்ணிற்கு அர்ப்பணிக்கத் தயாராகிறான். அதனாலேயே கழுத்தில் சைனட் குப்பிகளைத் தொங்க விட்டுள்ளான். எமது இயக்கத்தில் இளைஞர்கள் விரும்பிச் சேருகிறார்கள்.

#### பொது மக்களுக்கு பயிற்சி

பொதுமக்கள் தொடர்ந்தும் பார்வையாளராக இருக்கக்கூடாது பொது மக்களில் விரும்புவோருக்கு மாத்திரம் நாம் பயிற்சி வழங்கத் தயாராகவுள்ளோம்.

வெளிநாடுகளில் விடுதலைக்காக மக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன. நாங்கள் ஆயுதங்கள் வழங்கவில்லை. இராணுவத்தை வேறு விதமாக எதிர்க்கக்கூடிய கையாளத்தக்க உபகரணங்கள், தளபாடங்கள் உண்டு. அவற்றில் பயிற்சிகளை வழங்க முடியும்.

சிறிலங்கா அரசு எம் இன அழிப்புக்காக 12 புதிய ரக ஹெலிக் கொப்டர்களை இறக்குமதி செய்துள்ளது. இதில் 25 சிப்பாய்கள் பயணம் செய்யக் கூடியதாக இருக்கிறது.

இவ்வாறு ஹெலிக் கொப்டர் மூலம் மக்கள் வாழும் பகுதிகளிலுள்ள வெளிகளில் இறங்குபவர்களை தாக்குவதற்குப் பொதுமக்கள் தயாராக வேண்டியது முக்கியம் ஆகும்.

இந்திய அரசு சார்க் மாநாட்டின் போது தலைவர் பிரபாகரனை அழைத்து மாகாணசபையை ஏற்குமாறு கேட்டுக் கொண்டது அதனைப் பற்றிய பேச்சுக்கே இடமில்லை என பிரபாகரன் மறுத்துவிட்டார்.

அவ்வாறு ஏற்றுக் கொண்டிருந்தால் ஏனைய அமைப்புக்களின் நிலைமை எவ்வாறு இருந்திருக்கும்? எமது தமிழீழ மக்களின் நிலைமை எவ்வாறு இருந்திருக்கும்? நாம் எமது கொள்கையிலிருந்து இம்மியளவும் விலக மாட்டோம். தமிழீழத் தாயகம் அமைப்பது தான் எமது இலட்சியம்.

#### இனம் காணுங்கள்

பொதுமக்கள் எமது பத்துவருட வரலாற்றைப் படிக்க வேண்டும் (1976 - 1986 வரை) அல்லது 1983 தொடக்கம் இற்றைவரை உங்களைப் பாதுகாத்து வரும் அமைப்பு எதுவென இனங்காணவேண்டும்.

இன்று எம்மக்களிடையே சரியான பொருளாதாரத் திட்டங்களை அரசியல் வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தியவர்கள் யாரென மக்கள் உணரவேண்டும்.

நாங்கள் இராணுவத்திடமிருந்து பாதுகாப்பதுடன் நின்றுவிடாமல் உங்களை எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளுக்குமுரிய வேலைத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறோம் அதனால் எமது போராளிகளின் கைகளைப் பலப்படுத்துங்கள்.

ஏனைய இயக்கங்கள் விரும்பினால் எம்முடன் வந்து இணைந்து கொள்ளலாம். அவ்வாறு வருபவர்களை வரவேற்கிறோம்.

ஏனைய அமைப்புக்கள் தமிழீழத்தில் இருந்து மக்களையும் மண்ணையும் காக்கமுடியாது போனால் தாமாகவே கலைந்து போகலாம்.

#### பிரபாவுக்கு இன்னும் கட்டுப்பாடு

எமது தலைவர் பிரபாகரனுக்குப் போடப்பட்ட வீட்டுக்காவல் நீக்கப்பட்டாலும் அவரை சென்னையை விட்டு வெளியே போகவிடாமல் இந்திய அரசினர் கண்காணித்து வருகிறார்கள்.

ஏன் இந்த நிலை? இன்று ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் தான் சமாதானப் பேச்சுவார்த்தை என்று இந்திய அரசே உணர்ந்து விட்டது.

அதனால் எமது தலைவரை வெளிநாடு செல்லவோ அன்றி தமிழீழத்திற்கு வரவோவிடாது கண்காணிக்கிறது. இந்த உண்மையை ஏனைய அமைப்புக்கள் நன்கு உணரும் அரசின் உள் நோக்கம் ராணுவத் தீர்வு தான். ஆகையால் அடுத்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் சிறிலங்கா அரசினால் மும்முனைத்தாக்குதல் நடத்தப்படலாம். அதனை எதிர்க்கக் கூடிய திறமை எம்மிடம் உள்ளது.

இவ்வாறு கிட்டு கூறினார். (இ-118)

## திருவெம்பாவை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம். டிச. 14

''திருவெம்பாவைத் திறவு'' நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிறு காலை 11-00 மணியளவில் காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் இடம்பெறும்.

ஆதீனகர்த்தர் திரு. து. முருகேசு தலைமை வகிப்பார்.

பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் ஆங்கில விரிவுரையாளரும் வட்டுக்கோட்டை கலாநிலைய முதல்வருமான திரு. க. கயிலாயநாதன் இந்த நூலின் ஆசிரியர்.

முன்னாள் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. சபாபதி ஆய்வுரை வழங்குவார்.

முதல் பிரதியை தேவஸ்தான ஆதீனகர்த்தர் திரு. அ. ஆண்டி ஐயா பெற்றுக்கொள்வார். (இ-எ)

## சிறுடை--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கர் டாக்டர் உதுமாலெப்பையினுடையது என்று கூறப்படுகின்றது. இரண்டு லொறிகள் தீக்கிரையாக்கப்பட்டன. 3 அரிசி ஆலைகளும் எரிக்கப்பட்டன

முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் சொந்தமான 15க்கும் மேற்பட்ட கடைகளும் வீடுகளும் எரிக்கப்பட்டன என்று பின்னர் வந்த செய்திகள் தெரிவித்தன

தரவை அம்மன்கோயிலுக்கு தீ வைத்துச் சேதமாக்கப்பட்டது. (அ-எ-14)

## ஈழம்-----

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சையும் இலங்கை அல்லது இலங்கைத்தீவு என்பது தமிழரதும் சிங்களவரதுமான இருநாடுகளையும்கொண்ட நிலப் பகுதிகளையும் குறிப்பனவாகவே கொண்டு நாம் அவற்றினை உபயோகிக்க வேண்டும்.

## தேசிய--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள அகதிமுகாம்களுக்கும் இவர்கள் விஜயஞ் செய்து அகதிகளுடனும் முகாம் பொறுப்பதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்கள்

தலியார் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருக்கும் இவர்கள் நேற்று மாலை பிரசைகள்குழு பிரதிநிதிகளையும் மருத்துவ பிரதிநிதிகளையும் வேறுபொது ஸ்தாபன பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடினர்.

இந்த உரையாடல் யாழ் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

செய்தியாளர் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

## சுதந்திர...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பிய தந்தி ஒன்றில் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

படையினர் கண்டமாதிரித் துப்பாக்கிப்பிரயோகஞ் செய்ததில் சிவிலியன்கள் உயிரிழந்தனர் என்றும் தந்தியில் கூறப்பட்டுள்ளது (அ-எ)

## பலாலியில் பயின்ற ஆசிரியர்களுக்கான மாவட்ட நியமன விவரம்

யாழ்ப்பாணம், டிச. 14

பலாலி ஆசிரியர் கலாசாலையில் இருந்து இருவருடப் பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரியர்களுக்குப் பின்வரும் மாவட்டங்களில் நியமனம் கிடைத்துள்ளது.

இந் நியமன மாவட்டங்களில் மாற்றம் செய்ய விரும்புவோர் மூன்று வருட காலம் பின் தங்கிய மாவட்ட சேவையை முடித்திருந்தால் இம்மாதம் 22ஆம் திகதிக்குள் ஆசிரியர் சேவை ஆணைக்குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலும் விவரங்களை கலாசாலை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மாவட்டங்களும் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களும்:-

**யாழ்ப்பாணம்**

செல்வி எஸ். அருந்ததி, திருமதி. பி. மாலினி, திருமதி பி. விஜயலக்ஷ்மி, திரு. ஜே. தயாளன், திரு. எஸ். மயில்வாகனம், திரு ரி. பரமானந்தம், திரு எஸ். ரவீந்திரநாதன், திரு. எஸ். சர்வராஜா, செல்வி. கே. செல்வராணி, செல்வி பி. சாந்தினி, செல்வி. எஸ். தங்கேஸ்வரி, திருமதி. எஸ். இந்துமதி, திரு. சி. ஜே. திலகரட்னம், திரு. ஆர். வி. எஸ். திருநாவுக்கரசு, செல்வி. எம். செல்லையா, திருமதி. எஸ். கெந்தீஸ்வரன், செல்வி. வி. கோப்பெருந்தேவி.

**கிளிநொச்சி**

திரு. ரி. யோகதாசன், செல்வி. எஸ். செல்வமலர், திருமதி. ஆர். செல்வராஜா, திருமதி. எஸ். சிவகுருநாதன்.

**மன்னார்**

செல்வி எஸ். சுகந்தி, செல்வி. எஸ். ஆனந்தராணி, திருமதி சி. என். விஜயேந்திரன், செல்வி எஸ். கணபதிப்பிள்ளை, திரு. எஸ் கருணாநிதி, ஜனாப். என். வாஹிட்.

**முல்லைத்தீவு**

திரு. எஸ். அன்புமணி, திரு எஸ். செல்வராஜா. திருமதி. ரி. ருகினி, திரு. ஆர். செல்வநாயகம், செல்வி. எஸ். சிவகங்கை, செல்வி. ஆர். வீரசிங்கம், திரு. ஜே. குலதாஸ், செல்வி கே. அன்னமலர், செல்வி எஸ். செல்வராணி, செல்வி. ஈ. பெரியதம்பி, திருமதி. ஜே மார்க்கண்டு.

**வவுனியா**

திருமதி. எஸ். தியாகினி, திரு ஏ. எஸ். ஆனந்தநடேஸ்வரன், திரு. ம. பீற்றர் ஜெயசிலன், செல்வி. டி. சி ஜே. டொமினிக், திருமதி. ஜே. கௌரி.

**திருகோணமலை**

திரு. கே. குலசபாநாதன், திருமதி. வி. சுந்தரவதனா திருமதி. எஸ். மீனலோஜினி, செல்வி. ஐ. வாசுகி.

**மட்டக்களப்பு**

திரு. கே. தில்லையம்பலம்

**களுத்துறை**

திரு. கே அருளானந்தம்

**நுவரெலியா**

செல்வி. எஸ். சாந்தினி

## யாழ்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் கோட்டையிலிருந்து தான் அந்தச் சத்தங்கள் கேட்கின்றனவோ; சில நாள் இடைவெளியின் பின்னர் ஷெல் தாக்குதல் தொடங்கி விட்டதோ என்று பதற்றப் பட்டனர்,

ஆனால் அவை கோட்டையில் இருந்து வந்த சத்தங்கள் அல்ல என்றும்; இராணுவத்தினர் அமைதியாக இருப்பதாகவும் அறிந்து கொண்டனர்.

எனினும் மக்கள் வெளியில் புறப்பட்டுச் செல்லத் தயங்கி வீடுகளிலேயே இருந்தனர்.

நல்லூர், அத்தியடி, நாவற்குழி, அரியாலை, கோப்பாய், உரும்பராய் ஆகிய பகுதிகளில் இக்குண்டுச் சத்தங்கள் பயங்கரமாகக் கேட்டதாகவும், துப்பாக்கி வேட்டுக்கள் விட்டு விட்டுத் தீர்க்கப்பட்டதாகவும் அறியவந்தது.

இச் செய்தி கொழும்புக்கும் பரவி அங்கிருந்தும் பலர் இங்கு ஏதாவது அசம்பாவிதங்கள் நடக்கின்றனவா என்று வினவினார்கள்.

ஓர் இடத்தில் ஆரம்பித்த கோஷ்டிப் பிணக்கைத் தொடர்ந்தே வெடிச் சத்தங்கள் நகரையும் சுற்றுப்புறங்களையும் ஆக்கிரமித்தன என்று அறியவந்தது. (அ-10)

## கவின்கலை அரங்க நிகழ்ச்சிகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிச. 14

இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த தமிழர்கலாசார அவையின் கவின் கலை அரங்க நிகழ்ச்சிகள் யாவும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அவையின் நடவடிக்கைகளை விஸ்தரிப்பது சம்பந்தமாக இன்று நடைபெறஉள்ள விசேஷ பொதுக் கூட்டத்தை முன்னிட்டு இவ்வார நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன

அடுத்தவாரம் முதல் நிகழ்ச்சிகள் தவறாது தொடர்ந்து இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (2 ஆம் பக்கமும் பார்க்க)

## விளையாட்டரங்கு

## ஆஸ்திரேலியா 5 விக்கெட்டுக்கள் நஷ்டத்துக்கு 514 ஓட்டம்

அடிலேயிட், டிச 14

ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் அடிலேயிட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று முடிவுற்றது.

இரண்டு விக்கெட் நஷ்டத்துக்கு 207 ஓட்டங்களுடன் நேற்றைய ஆட்டத்தை ஆஸி. அணி ஆரம்பித்தது.

ஆட்ட நேரம் முடிவதற்கு 45 நிமிடங்கள் இருக்கையில் 5 விக்கெட் நஷ்டத்துக்கு 514 ஓட்டங்கள் என்ற நிலையில் தமது ஆட்டத்தை இடைநிறுத்திக் கொள்வதாக ஆஸி அணி அறிவித்தது.

தொடர்ந்து துடுபெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஆட்ட நேர முடிவின்போது விக்கெட் எதுவும் இழக்காமல் 29 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்கோர் விவரம்;

ஆஸ்திரேலியா; 5 விக்கெட் இழப்புக்கு 514 ஓட்டங்கள் டேவிட் பூண்: 103, டீன் ஜோன்ஸ் - 93, அலன் போடர் - 70, மார்ஷ் - 43, ரிட்ச்சி - 36, ஸ்டீவ் போவ், மத்தியூஸ் ஆகியோ ஆட்டமிழக்காமல் முறையே 79, 73 ஓட்டங்கள்.

இங்கிலாந்து: விக்கெட் இழப்புகள் இன்றி 29 ஓட்டங்கள். இங்கிலாந்தின் சகலதுறை வல்லுனர் என வர்ணிக்கப்படும் இயன்பொதம் சுகயீனம் காரணமாக இந்த ஆட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. (இ)

## அனாதை இல்லக் கொள்ளை பற்றி ஈ. பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், டிச. 14

உருத்திரபுரம் காந்தி சேவாசங்கத்தின் கீழ் இயங்குகின்ற தருமபுரம் அனாதைஇல்லக்கொள்ளை சம்பந்தமாக புலிகளின் அறிக்கைக்குப் பதிலாக ஈ. பி. ஆர். எல். எவ். பதில் அறிக்கை விடுத்துள்ளது.

மேற்படி சங்கத்தில் இருந்த பொருள்கள் அனைத்தும் புளொட் இயக்கத்தினருக்குச் சொந்தமானது. நாம் அப்பொருள்களை புளொட்டின் வேண்டுகோளுக்கிணங்க பாதுகாப்பதற்காக எமது அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றோம்.

எனினும் தமிழீழ விடுதலைப்புலிகள் விதண்டாவாதமாக இப்பொருள்களை ஏற்றும்படி இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை நாளை நடத்துவோம் எனவும் எம்மைக்கேட்டுக்கொண்டனர்.

இதனையடுத்து அப்பொருள்களை நாம் புலிகளின் வாகனத்தில் ஏற்றி விட்டோம்.

இதுதான் உண்மைச் சம்பவம்.

இப்படி அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ-10)

## கோஷ்டி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்படுகிறது

மன்னார் மாவட்டத்திலுள்ள அடம்பன் பகுதியிலேயே மேற்படி மோதல் நிகழ்ந்ததாக அறியவருகிறது.

இதேவேளை பள்ளிமுனைப் பகுதியிலும் சில இளைஞர்கள் மற்றொரு கோஷ்டி ஒன்றினால்பிடிக்கப்பட்டிருப்பதாகவும் அறியவருகிறது.

இந்தக் கோஷ்டிமோதலால் மக்கள் பெரும் பதற்றம் அடைந்திருக்கின்றனர், (அ-10)

## அம்பாறையில் கைதான 100 தமிழர்

அம்பாறை, டிச. 14

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஆயுதப்படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 100 தமிழர்களை விசாரணை நடத்தி விடுவிக்க வேண்டும்; அல்லது பூஸாதடுப்பு முகாமுக்கு அனுப்பப்படவேண்டும்.

இப்படி தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரமுகர் திரு. கா. வேல்முருகு, பாதுகாப்பு உயர்வட்டாரங்களைக் கோரியிருக்கின்றார். தற்சமயம் ஆயுதபடை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் கிராம ரீதியாக வருமாறு;

கல்முனை-39, வீரமுனை 11, நீலாவணை-31, துறவஞ்சிமேடு-03, துறை நீலாவணை-21. (இ-எ-14)

## விசேட பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி பூங்காவனம் வீதியூடாக பிரயாணம் செய்யும் சகல தூரசேவை பஸ் லொறி உரிமையாளர்களையும் 15-12-86 திங்கள் காலை 10 மணிக்கு யாழ் மணிக்கூட்டு வீதியில் இருக்கும் ஹோட்டல் ஞானம்ஸ் இல் வீதி திருத்தம் சம்பந்தமான கலந்துரையாடல் நடைபெற இருப்பதால் சகல தூரசேவை பஸ் லொறி உரிமையாளர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி
வணக்கம்

இப்படிக்கு,
செயலாளர்
ஆ. மு. இராஜகோபால்
வடமாநில லொறிப் போக்குவரத்துச் சங்கம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 14 - 12 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power-House Road, JAFFNA

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60; N 86

இலங்கைப் பல்கலைக் கழகங்களின்

**வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்**

கல்வியாண்டு 1987 / 88

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி
வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள் (2வது பிரிவு)

**ஜனவரி மாதம் 5ஆம் திகதி (05-01-1987) ஆரம்பமாகின்றன.**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

கலைமாணி (B. A,) விஞ்ஞானமாணி (B. Sc.) (கணிதம்) வர்த்தகமாணி (B. Com.)

★ 3 வருடங்களில் B A., B. Sc. பட்டதாரியாகலாம் ★ 4 வருடங்களில் B. Com. பட்டதாரியாகலாம்

(பட்டதாரிகளானால் உடனடி வேலை வாய்ப்புக்கள்)

விண்ணப்பங்கள் டிசம்பர் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும், விவரத்திரட்டினையும் பெற ''பதிவாளர், அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்'' என்ற பெயருக்கு ரூபா 10இற்கான காசுக் கட்டளையுடன் 9'' x 4'' அளவுடைய சுய முகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர், **ASTAN INSTITUTE**
No. 6/1, HOSPITAL ROAD, JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம், 1ஆம் மாடி.)
Branch: 101/1, STANLEY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கிக்கருகாமையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org